இரு ஊழியர்கள் கோரக் கொலை; பலர் காயம்

# தமிழகப் பத்திரிகை "தராசு" அலுவலகம் ஆயுதக் கும்பலினால் தாக்கப்பட்டுச் சேதம்

தமிழகத்தில் எழும்பூர் பகுதியில் உள்ள "தராசு" என்ற பத்திரிகை அலுவலகம் நேற்று முன்தினம் இனந் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. ஊழியர் இருவர் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் காலை சுமார் 20 பேரடங்கிய குழுவொன்று ஆட்டோக்களில் பத்திரிகை அலுவலகம் வந்து புகுந்தனர். தமது கைகளிலிருந்த பயங்கரமான ஆயுதங்களால் தராசு பத்திரிகை நிறுவன ஊழியர்களை வெட்டிக் காயப்படுத்தினர். அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் அனைத்தும் அடித்து நொருக்கப்பட்டன. மேற்படி பத்திரிகை நிறுவனத்தின் கணக்காளரையும், இன்னுமோர் ஊழியரையும் கத்தியால் குத்தி பலமாடிக் கட்டிடத்திலிருந்து அவர்களை கீழே வீசியதில் இருவரும் உடல் சிதறிப் பலியாகினர். இதன் பின்னர் அக்கும்பல் அங்கிருந்து வெளியேறிச் சென்றது. தமிழகப் பொலிஸாரின் தகவலின்படி தராசு பத்திரிகை நிறுவனத்திற்கு அருகிலேயே இலங்கைத் தமிழ் குழு ஒன்றின் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 261 பிரசோற்பத்தி ஆடி 31 ( 16 - 08 - 1991 ) வெள்ளி

# நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து இன்று மறியல் போராட்டம்

## யாழ் செயலகம் முன்பாக முதற்கட்ட எதிர்ப்பு நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் அகதிமுகாம்களுக்கு வெளியில் இருப்போருக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தை ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்ட அடிப்படையில் திடீரென நிறுத்தியிருப்பதைக் கண்டித்து இன்று காலை பெருமளவில் மறியற் போராட்டம் நடைபெறவுள்ளது.

உலர் உணவு நிவாரண நிறுத்தத்தைக் கண்டிக்கும் வகையில் யாழ் செயலகம் முன்பாக இன்று காலை 7. 30 மணிமுதல் மாலை 4. 30மணி வரை மாபெரும் மறியற் போராட்டம் நடாத்த யாழ் மாவட்ட தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் செயலகம் முன்பாக நடைபெறவுள்ள இம்மறியற் போராட்டத்தில் யாழ்மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள பொது நலக்கழகங்கள், சங்கங்கள், பொதுத் தொண்டர் தாபனங்கள் என்பனவும் —04ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாவசியப் பொருள்களுடன் 13 லோறிகள் வந்தன

வவனியாவில் நீண்டகாலமாக தவம்கிடந்த லொறிகளுள் பதின்மூன்று லொறிகள் நேற்று முன்தினம் இரவு பூநகரியை வந்தடைந்தன. யாழ் குடா நாட்டிற்கான இந்த லொறிகள் சீனி, மா, பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வந்து சேர்ந்தன,

அனுமதிக்கப்பட்ட லொறி —04ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு நாளுக்கு 10 லட்சம் ரூபா செலவு!

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவத்தின் உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கென நாள் ஒன்றிற்கு 10 லட்சம் ரூபாவை செலவழிக்கிறது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கென அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 2,500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (02)

## யாழ் மாவட்டத் திணைக்களங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்ப அனுமதி கிடைத்தது

யாழ் மாவட்டத்திலுள்ள எல்லாத் திணைக்களங்களினதும் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்படவுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள அரச, கூட்டுத்தாபன, திணைக்களங்களிலுள்ள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், புத்தகப் பதிவாளர் போன்ற அதன் இணைந்த தராதரங்களையுடைய வெற்றிடங்கள் நிரப் — 04ஆம் பக்கம் பார்க்க

## காணித்தகராறு கொலையில் முடிந்தது!

பல வருடங்களாக நிலவிய காணித் தகராறு நேற்றுக் கொலையில் முடிந்த சம்பவம் ஒன்று புத்தூரில் நடைபெற்றுள்ளது.

புத்தூர் நவக்கிரியில் நேற்று நடைபெற்ற இத் தகராறில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மக்கள் மூவரும் தாக்கப்பட்டதில் தந்தையரான அ. கைலாசபிள்ளை (60) என்பவர் பலியானார். கை. அற்புதமலர் (25), கை. தவேந்திரன் (20) ஆகியோர் படுகாயமடைந்தனர். 07

## சிறில் ரணதுங்கவிடம் கோரிக்கை

## லொறிகளை அனுமதிக்க சிப்பாய்கள் வேண்டாம்!

வடபகுதிக்கு வரும் லொறிகளை சோதனையிட்டு அனுமதி வழங்க வவுனியா தடை முகாமில் சாதாரண இராணுவச் சிப்பாய்களை நியமிக்க வேண்டாம் என யாழ் செயலகம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்டுள்ளது.

சாதாரண சிப்பாய்களுக்குப் பதிலாக அதிகாரிகள் தரத் —04ஆம் பக்கம் பார்க்க

## யாழ் அரச அதிபர் கோரிக்கை

## சகல வியாபாரிகளுக்கும் எரிபொருள் வழங்குக

யாழ் மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் எடுத்துவர உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கே அனுமதி வழங்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளதாம்.

உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு மட்டுமின்றி —04ஆம் பக்கம் பார்க்க

## உலர் உணவு நிறுத்தம் குறித்து அமைச்சரின் விளக்கம்!

வடகிழக்கில் திடீரென உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டது குறித்து புனர்வாழ்வு அமைச்சர் தயாரட்ன விளக்கமளித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் நாட்டில் வன்முறை ஏதும் நடைபெறவில்லையாம் எனினும் நிவாரணம் பெறும் அகதிகள் தொகை காரணமின்றி அதிகரித்து வருகிறது இதனாலேயே அகதிமுகாமிற்கு —04ஆம் பக்கம் பார்க்க

## புதுப்பிக்கத் தேவையில்லை

20.06 91 இலிருந்து 14 07.91 வரை வடபகுதிக்கு வெளியே செல்வதற்கென வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி அட்டைகள் 20.08 91க்கு முன் வடபகுதியை விட்டு வெளியே செல்வதற்கு பயன்படுத்துவதற்கு மீளப் புதுப்பிக்கத் தேவையில்லை என தமிழீழ கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

★ அனுராதபுர அரச அதிபரும் ஆட்சேபனை

## இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம்; மீள்பரிசீலிப்பதாக அரசு கூறுகிறது

யாழ் அரச அதிபர் மாதாந்தம் பிரதமர் டி. பி. விஜேதுங்கவை சந்தித்து வடபகுதி நிலைமை குறித்து விளக்கமளிக்க வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ பணித்துள்ளாராம்.

ஜனாதிபதியுடன் யாழ் அரசஅதிபர் சந்தித்துப் பேச்சு நடாத்திய போதே ஜனாதிபதி இப்பணிப்புரையை விடுத்தாராம்.

வடக்கு நிலைமை குறித்து அரச அதிபர் கடுமையாக எடுத்துரைத்த போது இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவது குறித்து மீள் பரிசீலனை செய்வதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

உலர் உணவு நிவாரண நிறுத்தம் இலங்கை பூராவிற்கும் பொருந்தும் எனவும் எனினும் இது குறித்து அநு —04ஆம் பக்கம் பார்க்க

(நேற்றைய தொடர்ச்சி)

(மாமனிதர் விருதுபெற்ற எஸ். திருநாவுக்கரசு (அரசு) அவர்களை குழந்தை சண்முகலிங்கமும், கந்தையா ஸ்ரீகணேசனும் செவ்வி காணுகிறார்கள்)

# மா மனிதருடன் ஒரு மணி நேரம்

கே: தங்களது நாடகம் தவிர்ந்த பிறகலை தொழில் ஈடுபாடுகள்...

ப: சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆறாம் வகுப்பு படிக்கும் போது தந்தையார் காலமானார். குடும்ப வறுமை காரணமாக தந்தையார் பார்த்த பரம்பரை வைத்தியத்தொழிலை பழக்கினர் ஆனால் எனது நாட்டமோ வேறு விதமாய் அமைந்து வண்ணார்பண்ணைச் சிற்பி சீனிவாசகிதபதி தொடர்பு காரணமாக தென்னிந்தியா சென்று 3 மாதகாலம் மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிற்பங்களை ஆராய்ந்தேன்' தொடர்ந்து விருதுநகர் வெயிலுகந்த அம்மன் கோயிற்திருப் பணியில் சிற்பப்பயிற்சி பெற்றேன். 2-ம் உலகப் போர்க்காலம் இதனால் இராணுவ சேவையில் 4 வருடம் இருந்தேன்.

1947 இல் ஈழம் திரும்பிய பின் மலையகத்தில் பெருந்தெருத் திணைக்கள உதவி மேற்பார்வையாளராகவும், பிஸ்கால் உத்தியோகத்தராகவும் கடமையாற்றினேன். பின்னர் யாழ்ப்பாணம் வந்து செல்வம்ஸ் ஸரூடியோவில் ஒளிப்படவியலாளர் பிலிப் நிக்கலசின் கீழ் ஒளிப்படவியலைப் பயின்று அங்கேயே தொழில் புரிந்தேன்.

அத்தோடு வில்லிசைக்கலையில் ஆர்வம் கொண்டு திருப்பூங்குடி ஆறுமுகம், சின்னமணி, கலாவினோதன், கணபதிப்பிள்ளை குழுவில் இணைந்து பக்கப்பாட்டுக் கலைஞராக இருந்ததோடு ஈழத்துத் திரைப்படங்களிலும் நடித்துள்ளேன்

கே: என்னென்ன திரைப்படங்கள்?

ப: V. S. T. புரொடக்ஸன்ஸ் 'குத்து விளக்கு' சுண்டிக்குளி சோமசேகரனின் 'டாக்ஸி றைவர்' மற்றும் P. N. வேதநாயகத்தின் கலாபவன பிலிம்ஸ 'கடமையின் எல்லை' (உதவி நெறியாளராகவும்) நடித்துள்ளேன்.

கே: ஈழத்து சினிமா வளராத துறையாகக் காணப்படுகிறது. இது ஏன்?

ப: போதிய அனுபவம் பெற்றவர்கள் இத்துறையில் ஈடுபடாததும் சிறந்த நடிகர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்காது பிரமுகர் வரிசையில் உள்ள செல்வாக்குப் பெற்றவர்களும் அவர்தம் நண்பர்களும் ஈடுபட்டதும் முக்கிய காரணம்.

கே: சிற்பத்துறை பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். தாங்கள் ஆக்கிய சிலைகள்...?

ப: தமிழீழத்தின் முதல் தியாகி சிவகுமாரன் சிலை,மேலைப் புலோலியூர் சதாவதானி கதிரவேற்பிள்ளை சிலை, பருத்தித்துறை புற்றலை தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் சிலை ஆகியவற்றை ஓவியரும் சிற்பியுமாகிய எனது மருகர் ரமணியுடனும் கலைஞர் அன்ரன் ஆசிரியருடனும் இணைந்து உருவாக்கினேன்.

கே: மீண்டும் நாடகத்துக்கு வருவோம் நாடகத்தின் வெளியீட்டுப் பண்பை உணர்ந்து கொள்ளத் தவறும் சில இயக்குநர்கள் சினிமாவின் தாக்கத்தினால் நாடகத்திலும் கூடத்திலும் அவற்றின் உள்ளார்ந்த தன்மைகளைச் சிதைக்கும் வகையில் நடிப்பு, இசை, காட்சியமைப்பு, வேட உடுப்பு விதானிப்பு ஆகியவற்றில் மாற்றங்களைப் புகுத்துகின்றனர். இது பற்றி ?

ப: மாற்றங்கள் தேவையானதுதான். ஆனால் அடிப்படையை மறக்கக் கூடாது நாடகம் வேறு, சினிமா வேறு, இரண்டும் வெவ்வேறான ஊடகங்கள். நாடகத்தை நடிகனின் கலை என்றே கூறுவர். நடிகனை விழுங்கக்கூடிய காட்சியமைப்பு ஒளியமைப்பு, உரையாடல், ஒலி இசை அமைப்புக்கள் அமையக் கூடாது. ஒரு மேடை அளிக்கைக்கு இவை யாவும் உறுதுணையானவையே ஒழிய முதல் தரமானவையல்ல.

தமிழ்த்திரைப்பட வரலாற்றில் மேடை நடிகர்களே திரைப்படத்தில் நடித்ததனால் திரைப்பட நடிப்பு என நன்றி இல்லாது போயிற்று. அதேபோல் திரைப்படத்தில் காட்டிய மாயைகளை, தந்திரக்காட்சிகளை மேடைக்குக் கொண்டு வந்த அவலம் நாடகச்சுவை நுகர்ச்சியைப் பாதித்தது. இது போலவே கூத்து போன்ற மரபு வகைகளைத் தயாரிப்போர் அதன் உள்ளார்ந்த பண்புகளை மனங்கொண்டு தயாரிக்க முயலவேண்டும். இல்லையெனில் அதன் தொடர்புப் பண்பாடு அழிந்து வெறும் தொழில் நுட்பங்களே மிஞ்சும் கலை அழிந்து விடும்,

கே: அன்றைய மேடைக்கும் இன்றைய மேடைக்கும் இடையில் நீங்கள் காணும் வித்தியாசங்கள் ... ?

ப: பாரம்பரியக் கூடத்தில், நடிகன் முதன்மை பெற்றான். அவனது பாடலும், நாடகத்தை நடாத்தியது பாடலிலேயே நாடகக்களம் விவரிக்கப்பட்டது. வட்டக்களரியில் ஆட்டம் நடந்தது. காட்சியமைப்புகள் இருக்கவில்லை, இடைக்காலத்தில் பம்மல் சம்பந்தமுதலியாரைக் குருவாகக் கொண்ட கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களிலும் பார்சி தியேட்டரின் தாக்கத்தால் சங்கரதாஸ் சுவாமிகள் வழி வந்த இசை நாடகங்களிலும் காட்சிப்பின்னணிகள் ஏற்படுத்தப்பட்டன. கலையரசரின் நாடகங்களில் தேவைக்கு ஏற்பவே காட்சியமைப்பு மேற்கொள்ளப்பட்டது. சினிமாவில் காட்டுவது போல் வரும் காட்சிகளை அமைக்கும் அவலம் இன்றைய நவீன நாடகங்களில் காணப்படுவதில்லை. குறியீட்டுப் பாங்கில் அவசியமான மேடைப்பொருள்களே அரங்கில் காட்சியளிக்கும். சில சமயங்களில் நடிகர்களே காட்சிப் பொருட்களாக அபிநயிப்பர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# 9ஆம் ஆண்டு கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சை

## டிச. 18 இல் நாடுமுழுவதும் நடாத்தப்படும்

ஒன்பதாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்பதராதரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளது.

ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கு இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட கனிஷ்ட தொழில்நுட்ப பாடநெறி 53 பிரிவுகளைக் கொண்டது. இதில் ஒருபாடநெறியை மாணவர்கள் கட்டாயம் பயில வேண்டும்.

பாடசாலை மட்டத்திலான மதிப்பீட்டின் அடிப்படையிலும், டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுப்பரீட்சையின் அடிப்படையிலும் 9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு மேற்படி சான்றிதழ் வழங்க படும்.

இச் சான்றிதழ் பெறுவோர் பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்நுட்ப டிப்ளோமா வரை தமது கல்வியைத் தொடர வழி செய்யப்பட்டுள்ளது.

இப் பரீட்சை முதற் தடவை நடாத்தப்படுவதினால் இதற்குரிய மாதிரி வினாத் தாள்களைப் பரீட்சைத் திணைக்களம் பாடசாலைகளுக்கு அனுப்பவுள்ளது. (08)

## ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு புதிய கணக்காளர் நியமனம்

யாழ் செயலகத்தின் ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு பொறுப்பாகப் புதிய கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை யாழ் செயலகத்தின் பிரதான கணக்காளரே இக் கொடுப்பனவுகள் தொடர்பான கருமங்களை மேற்கொண்டு வந்தார்.

கிளிநொச்சி செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. வீரசிங்கம் அவர்களே யாழ் செயலக ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவராவர்.

யாழ் மாவட்ட ஒய்வூதியர் சங்கத்தின்பிரதிநிதிகள்கடந்த ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாக மேற்படி கணக்காளரைப் பேட்டிகண்டு, தங்களது கஷ்டங்களைத் தெரியப்படுத்திக், கூடிய விரைவில் ஒவ்வொரு மாதத்திற்குமுரிய ஒய்வூதியக் கொடுப்பனவுகளை அந்த மாத முதல் வாரத்திலேயே கொடுப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (25)

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

அரசாங்கப் பாடசாலைகளில் நிலவுகின்ற குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்

ஒரு மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் சேவையில் இருக்கும் ஆசிரியர்கள் மற்றொரு மாவட்டத்தில் சேவை புரிய, மாற்றம் பெறவிரும்பினால் மாகாண கல்வித் திணைக்கள மூலம் இடமாற்றம் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மாற்றம்பெற விரும்புபவர்கள் இரு பிரதிகளில் விண்ணப்பங்களைத் தயாரிக்கவேண்டும்.

மூன்று வருடங்கள் சேவை புரிந்த ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இரண்டில் ஒன்றைத்தாம் இடமாற்றம் பெறவிரும்பும் பாடசாலை அதிபருக்கும் கோட்ட அலுவலகப் பிரதம கல்வி அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

ஓர் ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைக்கு விண்ணப்பிக்க இயலும். வெற்றிடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்களை அதிபர், கல்வி அதிகாரி, மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் சிபார்சு செய்து இடமாற்றத்தை வழங்குவர். விண்ணப்பங்கள் இது தொடர்பாக மாகாண மட்டத்தில் கோரப்பட்டுள்ளன. (06)

## விசேட வகுப்புக்கள்

1990, 1991 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆசிரிய தராதரப் பத்திர இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்குப் பயன்படும் முகமாக விசேட வகுப்புக்கள் 18 09.91 தொடக்கம் நடைபெறும். இவற்றில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் 19 08. 91 மு. ப. 9. 00 மணிக்கு முன் கலாசாலையில் சமுகமளிக்கும்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவிக்கின்றார்.

## அடையாள அட்டைகள் இன்னும் வந்துசேரவில்லை

யாழ் அரச செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தால், அடையாள அட்டைகள் வழங்குவதற்காகக் கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட சுமார் 4000 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களுக்கு இதுவரையில் அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை.

கடந்த ஏழு மாதங்களாக இங்கிருந்து அனுப்பப்பட்ட அவசர, சாதாரண. பாடசாலை மாணவர்களுக்கான இவ் விண்ணப்பங்கள் மாதாந்தம் கொழும்புக்கு அனுப்பப்பட்ட போதும், அடையாள அட்டைகள் வந்து சேருவதாகத் தெரிய வில்லை. இவை தவிர தொலைந்த அடையாள அட்டைக்கானதும். பழுதடைந்த புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களும் சுமார் 500 க்கும் மேற்பட்டதாகும். மொத்தமாக 4,500 அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து வந்து சேரவுள்ளன. இவ்வடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பலர் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அலைந்து திரிவதைக் காணக்கூடியதாயுள்ளது (25)

★ போர்த்துளி...

அருந்ததியாய் இருப்ப
தற்கு
நாம் ஆசைப்படவில்லை
நிரந்தரமாய் இருப்ப
தற்கு
சொந்த வீட்டைக் கேட்
கிறோம்
அவ்வளவுதான்
— செழியன்.

## தமிழ்த் தம்பதி கைது

சிங்கப்பூரிலிருந்து பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளைக் கடத்தி வந்த ரவிக்குமார் என்ற இளைஞரும், அவரது மனைவியும் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (06)


## சிறு விளம்பரம்

### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாப தோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகின்றோம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி, நல்லூர். 08071

### விற்பனைக்கு

புனலைக்காய் ¼கிலோ பக்கற்றுகளில் விற்பனையாகிறது. பக்கற் விலை ரூபா 25/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். 08086

### SALE

Rare Selections of Eng-lish Books in all Fields off the Shelves of family libraries on 15th to 17th August 1991. Suitable for educational Institutions/ Family library/ lecturers. Eric Ganesh (opticians) 566,Hospital Road,Jaffna. 08080

## நன்றி நவிலல்

### திருமதி கண்மணி அம்மாள் RAO SAHIB சின்னத்தம்பி

எனது அன்புத்தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

18. 08 91 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்கான வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

சி. தியாகராஜா
இளைப்பாறிய உதவிக்கல்விப்-பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

'வேதாரிணியர் வளவு'
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
08090

# "மாவீரர்களின் கைகளிலிருந்து நழுவும் ஆயுதங்களைத் தெருமண்ணில் விழ விடலாமா?"

- கவிஞர் வாஞ்சிநாதன்

''எமது தலைவர் பிரபாகரன் தனது போராளிகளான பிள்ளைகளுக்குப் போர்க் கலையை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை. அதனோடு சேர்த்து ஆயுதங்களை எவ்வாறு புனிதமாகப் பராமரிக்க வேண்டும் என்பது பற்றியும் நிறையச் சொல்லிக் கொடுத்துள்ளார். ஒரு ஆயுதத்தைத் தன் உயிரிலும் மேலாகப் பேணும் பக்குவமும், மனோபாவமும் உலகில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர வேறு யாரிடமும் இல்லை என்று துணிந்து கூறி விடலாம்.

அப்படிப்பட்ட ஆயுதங்கள் போர்முனையில் எமதுபோராளிகளின் நெஞ்சங்களில் குண்டடிபட்டு நிலத்திலே விழுமானால், தெருப் புழுதியில் அவை அநாதரவாகக் கிடப்பதைக் கண்டால், மரணித்த அந்த மாவீரர்களின் 'ஆத்மா' சாந்தியடையுமா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

அப்படிச் சிந்தித்துப் பார்த்து அம்மாவீரர்கள் தமது உயிரை விடப் பெரிதென்று எண்ணிப் பேணிக் காத்த ஆயுதங்களைத் தூக்கி அந்த மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடினார்களோ அதை அடைய ஒவ்வொரு தமிழ் வாலிபனும், யுவதியும் முன்வர வேண்டும்''

இவ்வாறு அண்மையில் சுன்னாகம் ஐயனார் கோவிலடியில் நடைபெற்ற போர்க் காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

## பணிநிறைவேற்றறிக்கையை மாதாமாதம் தயாரிக்கப் பணிப்பு

வடகிழக்கு மாகாண கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மாதாமாதம்பணி நிறை வேற்றறிக்கை யொன்றைத் தயாரித்து ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்க வேண்டுமென வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல பிராந்திய பணியாளர்களுக்கும், கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.

மாணவர் அபிவிருத்தி, காரியாலயம் பாடசாலை ஆளணித் தேவையும் பயன்பாடும், முறைசார் பாடவிதானத்தை அமுலாக்கல் இணைப்பாடவிதானம், மேற்பார்வையும் மதிப்பீடும், மூகாமைத்துவ அபிவிருத்தி, விசேட கல்வி, சுற்றாடலும் பாடசாலையும், முறைசாராக்கல்வி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்பற்றித்தெரிவிப்பதே இப்பணி நிறைவேற்றறிக்கையின் குறிக்கோளாகும். (15)

## வெற்றிடங்கள் நிரப்பப்படாநிலை அத்தியாவசியகடமைகள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதால் அம் மாவட்ட அத்தியாவசிய கடமைகளை செய்வதில் சிரமம் ஏற்படுவதாக அம் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் கடமை புரிந்த ஊழியர்களில் 50% இற்கு மேற்பட்டோர் இந்த ஆண்டு தைமாதம் ஒய்வு பெற்றுச் சென்றுள்ளனர்.

ஒய்வு பெற்றுச் சென்றுள்ளவர்களில் உயரதிகாரிகளும், லிகிதர்களுமே அதிகமானவர்கள் ஆவர். (24)

## மதுபான விலை அதிகரிப்பினால் அரசுக்கு 40 கோடி ரூபா வருமானம்

சாராயம் மற்றும் உள்நாட்டு மதுபான வகைகளின் விலை போத்தலுக்கு 5 ரூபாவினாலும், பியர் போத்தல் ஒன்றின்விலை 2 ரூபாவினாலும், சிகரெட் ஒவ்வொன்றினதும் விலை 15 சதத்தினாலும் அண்மையில் அதிகரிக்கப்பட்டதனால் அரசுக்கான வருமானத்தில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது

இந்த விலை உயர்வினால் அடுத்துவரும் ஆறுமாத கால எல்லைக்குள் அரசின் வருமானம் 40 கோடி ரூபாவினால் அதிகரிக்கும். (08)

## மே.இந்திய தீவுகள் அணியை இங்கிலாந்து அணிவென்றது

இங்கிலாந்து அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும், இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான கிறிக்கெற் ரெஸ்ற் போட்டியில், இங்கிலாந்து அணி 5 இலக்குகளால் வெகு இலகுவாக வெற்றியீட்டியது.

மேற்கு இந்தியதீவுகள் அணி வீரர்கள் விவியன் றிட்சட்ஸ், றிச்சி றிச்சட்சன் ஆகியோர் சாதுரியமாக ஆடி முறையே பெற்ற 60,121 ஓட்டங்களினாலேயே ''இனிங்ஸ்'' தோல்வி தவிர்க்கப்பட்டது என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 416 ஓட்டங்களைக் குவித்து ஆட்டம் இழந்தது.

மேற்கிந்திய தீவுகள் அணி அதன் துடுப்பாட்டத்தில் சகல இலக்குகளையும் துரித கெதியில் பறிகொடுத்து 176 ஆட்டங்களை மாத்திரமே பெற்றதினால், தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. இரண்டாவது இனிங்சில் மே. இந்திய அணி 385 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

இங்கிலாந்து அணி அதன் இரண்டாவது துடுப்பாட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இப் போட்டித் தொடரில் இரு அணிகளும் தலா 2 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. ஒருபோட்டிவெற்றி தோல்வியின்றி 'ட்றோ' வில் முடிவுற்றுள்ளது 16

## 'நாடகம் பயிலும் வாய்ப்பு அவசியம்'

'குழந்தை' சண்முகலிங்கம்

''எமது பாடசாலை மாணவர் நாடகத்தை விருப்பத்திற்குரிய பாடமாகப் பயில்வதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக நுண்கலைத் துறையும் நாடக அரங்கக் கல்லூரியும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடத்திய நாடகக்களப் பயிற்சியை நிறைவு செய்து உரையாற்றிய நாடகாசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

''தற்பொழுது பிள்ளைகள் சித்திரம், சங்கீதம், நடனம் இவற்றுள் ஒன்றைத் தெரிந்தெடுக்கிறார்கள். ஆனால் கைவண்ணமோ, குரல் வளமோ, அசையும் நளினமோ கைவராதோர் விரக்தியடைகிறார்கள் விடுபட்டுப் போகிறார்கள். நாடகம் நிச்சயம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

களப்பயிற்சியில் பங்கு பற்றிய எண்பது ஆசிரிய, மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கிய வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் பலாலி ஆசிரியகலாசாலையின் முன்மாதிரியைப் பாராட்டியதோடு ''இம் முயற்சி அங்கு வழங்கப்படும் பயிற்சிக்கு முழுமை தருகிறது'' என்றார்

மாணவர் தலைவர் இரத்தின சிங்கம் நன்றியுரை கூறினார்.

## மகோற்சவம்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பகுதி முருகன் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24ஆந் திகதி தேர்த் திருவிழாவும், 25ஆந் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (05)

## உடலில் புற்றுநோய்க் கிருமிகளை கோழிமுட்டை இல்லாதொழிக்கும்

கோழிமுட்டையிலுள்ள இரு பொருள்கள் உடலிலுள்ள புற்றுநோய்க் கிருமிகளை அழிப்பதுடன், புற்று நோய்க் கிருமிகள் உடலில் உண்டாகாமல் தடைப் பொருளாகவும் திகழ்வதை இரு ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

வெள்ளைக்கரு மனித உடலின் 90 வீத பகுதிகளில் புற்று நோய்க் கிருமிகளை அண்ட விடாது தடுத்து விடுகிறது என்பது கியோட்டோ பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் கண்டுபிடிப்பாகும் (05)

## வேதாகம போட்டி

யாழ் மறைக்கல்வி நிலையம் வேதாகம கட்டுரைப் பேச்சுப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது (16)

## 'மன்னனை மயக்கிய மல்லிகை' தமிழகத்தில் வாசமிழக்கிறது!

தமிழ்நாட்டில் மல்லிகை, ரோசாப்பூ மாலைகளுக்குத் தற்போது கிராக்கியே இல்லை. ராஜீவ் கொலைக்குப் பின் இவற்றை வாங்குவோரே இல்லை.

பூ மார்க்கட், மைலாப்பூர், திருவல்லிக்கேணி பூக் கடைக்காரர்கள் தேர்தல் முடிவு அறிவித்தபோது கூட மாலைகள் விற்பனையாகவில்லை என்றனர்.

சிறிய மாலைகள் ஓரளவு விற்பனையானாலும், 1500 ரூபா, 2000 ரூபாவுக்கு விற்ற மாலைகளை எவரும் வாங்குவதில்லை. விசேட வைபவங்களில் முதலமைச்சர்கள் அணிபவை இவை. இந்த மாலையை ஆறு பேராதல் காவியே எடுத்துச் செல்லல் வேண்டும்.

முதலமைச்சர் ஜெயலலிதாவை எவரும் மாலையுடன் சந்திக்க முடியாது. சால்வைகளுக்கும் அங்கு தடையுண்டு

## தொழில் முகவராகவும் இயங்கும் இலங்கைத் தூதுவர்

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதுவர் ஒருவர் சட்ட பூர்வமற்ற தொழில் முகவராக இயங்கி வருகின்றாராம்.

இவர் தான் தூதுவராக உள்ள நாட்டில் பல்வேறு காரியாலயங்களுக்கும் ஏறி இறங்கி வேலைவாய்ப்புக்களைத் தேடுகின்றாராம்

பாராளுமன்றத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இவ் விவகாரத்தை அம்பலப் படுத்தியுள்ளார்.

இத்தகையோரால் நாட்டின் மதிப்பு பாதிக்கப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்ட அவர் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் கடமை புரிவோரின் கடந்தகாலத் தவறுகள்பற்றி விசாரித்துத் தண்டனை விதிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டிலுள்ள மற்றொரு இலங்கைத் தூதுவராலயத்தில் கடவுச்சீட்டு விடயமாகச் சென்ற இலங்கைப் பெண்மணி ஒருவர் அங்குள்ள அதிகாரி ஒருவரினால் மானபங்கப்படுத்தப்பட்டமை பற்றியும் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

## எம்.ஜி ஆர். மாவட்டம்

மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனின் பெயரில் எம் ஜி. ஆர் மாவட்டம் ஒன்றைத் தமிழகத்தில் ஏற்படுத்த மத்திய அரசு அங்கீகாரமளித்துள்ளது.

அத்துடன் தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு காயிதே மில்லத் மாவட்டம் உருவாக்கப்படும்.

திண்டுக்கலில் உள்ள தஞ்சாவூர் மாவட்டம் ஒழிக்கப்படும் புதிதாக அண்ணா மாவட்டம் ஒன்றும் உருவாக்கப்படும். (08)

# செய்தி உலகம்

## மடகஸ்காரில் 50 பேர் பலி

மடகஸ்கார் ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு கோரி அங்கு நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் அரச துருப்புக்கள் சுட்டதில் 50 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50 பேர் காணாமற் போயினர். துருப்புக்களின் சூட்டை ஆட்சேபித்து அங்கு நேற்று முன்தினம் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டது.

## 'சுப்பர் கன்னை' அழிக்க உத்தரவு

ஈராக்கிடமுள்ள 'சுப்பர் கன்' எனப்படும் மிகப் பெரிய துப்பாக்கியை அழித்துவிட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கிடம் கேட்டுள்ளது.

## இந்தியாவுக்கும் பாதிப்பு

குவைத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளை ஈராக் தீயிட்டுக் கொளுத்தியதனால் ஏற்பட்ட புகையினால் குவைத் மற்றும் வளைகுடா நாடுகள் மட்டுமன்றி ஆபிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படலாமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனா.

## ஒப்பந்தம் மேலும் நீடிப்பு

இந்தியா - சோவியத் ரஷ்யாவுடனான தனது ஒப்பந்தத்தை மேலும் 20 வருடங்களுக்கு நீடித்துள்ளது

இந்த இந்திய - ரஷ்ய நட்புறவு ஒப்பந்தம் 20 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## சனநெரிசலில் 9 பேர் பலி

இந்தியாவின் பீகாரில் சிவன் ஆலயமொன்றில் ஏற்பட்ட சன நெருக்கடியில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர், 20 பேர் காயமடைந்தனர் பீகார், நேபாளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பக்தர்கள இவ் ஆலயத்தில் குறுகிய பாதையில் நெருக்கமாகச் செல்ல முற்பட்டபோது இச்சம்பவம் நடந்தது.

## இருவருக்கு அபராதம்

புதிய பிரிட்டிஷ் ஏவாயுத நீர்மூழ்கிக்கான சாதனம் ஒன்றை ரஷ்யாவுக்கு விற்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் ஒரு துறைமுகபாதுகாவலரும் அவரது நண்பரும் கைது செய்யப்பட்டு 15 மாத சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். இந்த சாதனத்தை 32 லட்சம் டாலருக்கு விற்க இவர்கள் விலைபேசியபோதே அகப்பட்டுக் கொண்டனராம். (08)

# மேலும் இரு வவுனியா வர்த்தகர் இராணுவத்தால் கைது

வவுனியாவில் மேலும் இரு வர்த்தகர்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதிக்கு பொருள்களை அனுப்புவதில் லஞ்சம் பெற்றார்கள் எனக்குற்றச்சாட்டின் பேரில் அனுராதபுரத்தில் கைதான வர்த்தகர் ஒருவரின் தகவலின் அடிப்படையிலேயே இவ்விரு வவுனியா வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# கச்சதீவை மீளப்பெறவேண்டும் ஜெயலலிதா சூளுரை!

தமிழகத்தினுள் ஊடுருவும் எந்த வெளிச்சக்திகளும் ஒடுக்கப்படுவர் இதற்கு தமிழகப் பொலிசுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சென்னையில் இந்திய சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

பொலிஸாரின் கைகளைக் கட்டாது அவர்களை நடவடிக்கை எடுக்க விட்டமையினால் தமிழகத்தில் வெளியார் தலையீடு குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசின் பாதுகாப்பு நடவடிக்கையினால் தமிழக மீனவர்கள் பாதிப்படைந்துள்ளதை ஒப்புக்கொண்ட ஜெயலலிதா, இதற்கான ஒரே தீர்வு கச்சதீவை ஸ்ரீலங்காவிடமிருந்து மீளப் பெற்றுத்தர இந்திய மத்திய அரசு முயற்சி செய்யவேண்டியது தான் எனவும் சொன்னார்.

# கிளிநொச்சி பாடசாலைகள் நேற்றுமுதல் ஆரம்பம்

கிளிநொச்சிப் பாடசாலைகள் நேற்றுமுதல் இயங்க ஆரம்பித்துள்ளதாக கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி முரசொலிக்குத் தெரிவித்துள்ளார்.

பிற மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பலர் சமூகம் கொடுக்கவில்லை எனவும் உடனடியாகத் தங்கள் பாடசாலைக்கு இவர்கள் சமூகம் அளிக்குமாறும் கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி கேட்டுள்ளார். (17)

# குஞ்சுப்பரந்தன் கால்நடைகள் தொண்டையடைப்பால் பாதிப்பு

கிளிநொச்சி - குஞ்சுப்பரந்தனில் கால் நடைகளுக்கு தொண்டையடைப்பான் நோய் பரவிவருகிறது.

கால்நடைகளை குஞ்சுப்பரந்தனுக்குக்கொண்டு செல்வதையோ அங்கிருந்து வெளியே கொண்டு செல்வதையோ தவிர்க்குமாறும், கால் நடை வளர்ப்போர் இதற்கான தடுப்பூசிகளை கால்நடைகளுக்கு இடுமாறும் கிளிநொச்சிப்பகுதி மிருக வைத்தியர் அறிவுறுத்தியுள்ளார். 17

## உலர்...

வெளியே உள்ளவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்படுகிறது என அவர் காரணம் காட்டியுள்ளார்.

இதேவேளை அரசின் இத்திடீர் முடிவை 12 எதிர்க்கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்துள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## தமிழகப்...

பிரமுகரான சந்திரகாசன் தங்கியிருந்ததாகவும் இவருக்கு பாதுகாப்பளித்திருந்த மூன்று பொலிஸார் கூட சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது. தராசு பத்திரிகை ஆசிரியர் ஷியாம் தகவல் தருகையில் ஆயுதங்களுடன் வந்த கும்பல் குடிபோதையில் இல்லாமையினால் "அவர்கள் உள்ளூர் வாசிகள் அல்ல எனக் குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## மா மனிதருடன்...

நடிப்புத்துறையிலும் பழைய அரச நாடகங்களில் ஒருவகையான பிரகடனத்தன்மை வாய்ந்த நடிப்புக் காணப்பட்டது. தொடர்ந்து வந்த சமூக, அரசியல், சீர்திருத்த நாடங்களில் ஒருவித விசிறல் நடிப்பும், மிகை நடிப்பும் செய்யப்பட்டன. இன்று இயல்பான நடிப்புடன், மோடிப் படுத்தப்பட்ட நடிப்பும், குறியீட்டுத்தன்மை துலங்கும் வண்ணம் பெரிதாக செய்து காட்டும் நடிப்பு உத்திகளும் அரங்கில் பயன்படுத்தப் படுகின்றன.

எழுத்துருக்களில் கூட வார்த்தையலங்கார நடை அற்றுப் போய் அர்த்தம் பொதிந்த அளவான சொற்பிரயோகம் ஆட்சி செலுத்துகிறது. பேசும் முறைமை மிகவும் யதார்த்தமாக (உச்சத் தொனியில் கத்தாமல்) இயல்பாக அமைக்கப்படுகிறது பாவிக்கப்படும் மொழிநடை செந்தமிழாக அல்லாமல் வட்டார வழக்குகளில் அமையும் பேச்சுத் தமிழாக இருக்கிறது.

(வளரும்)


1-ம் ஆண்டு ஞாபகார்த்த

திருப்பலிப்பூசை

யோசேப் வசந்தி, யோசேப் வதனி

யோசேப் வசந்தி. யோசேப் வதனி ஆகியோரின் 1-ம் ஆண்டு நினைவாக நாளை சனிக்கிழமை மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம்,

தகவல்:
இ. யோசேப்
கிளாலி வீதி,
எழுதுமட்டுவாள். 08096


# நிறுத்தப்பட்ட நிவாரணத்திற்குப் பதிலாக உணவு முத்திரைத் திட்டம் அமுலாகும்?

இதுவரை வழங்கப்பட்டு வந்த உலர் நிவாரணம் நிறுத்தப்பட்டதற்கு பதிலாக முன்னர் நடைமுறையிலிருந்த உணவு முத்திரைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

5வது சுற்று உணவுமுத்திரையில் 8வது புள்ளிவரையும் உணவு முத்திரைகளுக்கு முன்னர் உணவு வினியோகம் செய்யப்பட்டது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற சூழ்நிலை காரணமாக உணவு முத்திரைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு, உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. சுமார் 60 மாதங்கள் வழங்க வேண்டிய உலர் உணவு நிவாரணத்தில் 15-16 வாரங்களே இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

உலர் உணவு நிவாரணம் வழங்குவதனை நிறுத்தி, மீண்டும் உணவு முத்திரைத் திட்டத்தை அமுல் நடாத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும், இதன் ஆரம்ப நடவடிக்கையாக யாழ் வரவிருக்கும் கப்பலில் உணவு முத்திரைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது

அவ்வாறு உணவு முத்திரைகள் யாழ் செயலகத்தை வந்து சேர்ந்ததும், அவற்றை உடனடியாக உதவி அரச அதிபர்களுக்கு விநியோகம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 5வது சுற்று உணவுமுத்திரைகள் எந்த அளவில்வழங்கப்பட்டதோ, அதே அளவு முத்திரைகளை ஒவ்வொரு உதவி அரச அதிபர்களுக்கும் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. 25

## பதவி...

புவதற்குரிய அனுமதி யாழ் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

அதேவேளையில் மேற்படி பதவிகளுக்கான ஆட் சேர்ப்பினைச் செய்வதற்குரிய அடிப்படைத் தகைமைகள் பற்றியும், எந்த அடிப்படையில் ஆட்களைச் சேர்ப்பது என்பது பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. 25

## லொறிகளை...

திலானவர்களை இதன் பொருட்டு பயன்படுத்துமாறு இதன் மூலம் லொறிகளின் பயணம் அநாவசியமாக தாமதமாவதை தடுக்கமுடியும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பொருள்களுடன் வடபகுதி நோக்கி வந்த 200க்கும் மேற்பட்ட லொறிகள் அநுராதபுரத்தில் படையினரின் அனுமதிக்காக காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 02

## சகல...

அனைத்து வியாபாரிகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் அரச அதிபர் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது. 02

## நிவாரண...

கலந்து கொள்ளவுள்ளன.

இம்மறியற் போராட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் உட்பட கூட்டுறவுச் சங்கங்கள் சனசமூகநிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள், பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்

ஸ்ரீலங்கா அரசின் இந்த உலர் உணவு விநியோக நிறுத்தத்தால் 1 லட்சத்து 75 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டு பட்டினியால் வாடும் நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அரசின் பொருளாதாரத் தடையினால் உணவு முத்திரை மற்றும் ஜனசக்தித்திட்டம் போன்ற உதவித் தொகை வழங்கும் செயற்பாடுகள் வடக்கில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை வடகிழக்குக்கு வெளியே வாழும் மக்களுக்கு நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்த உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனை ஆட்சேபித்தே இன்று முதல் மறியற் போராட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. (01, 07)

# பிரேதப்பெட்டியை திறக்க அஞ்சி சடலங்கள்தகனம்செய்யப்பட்டன

ஆனையிறவு மோதலில் புலிகளால் மீட்கப்பட்ட 29 படையினரின் சடலங்களும் கொழும்பு கொண்டுவராமை குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று செய்தியாளரிடம் விளக்கமளித்துள்ளார்.

படையினரின் பிரேதப் பெட்டிகளை திறக்கும்போது சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களும் அங்கு சமுகம்தரவேண்டும் எனக் கோரியிருந்தோம். எனினும் செஞ்சிலுவை உறுப்பினர்கள் அங்கு சமுகம்தரவில்லை.

இதனால் பாதுகாப்புக் காரணங்களையொட்டி பெட்டிகள் திறக்கப்படாமலேயே படையினர் சடலங்கள் தகனம் செய்யப்பட்டுவிட்டதாக அவ்வதிகாரி காரணம் தெரிவித்துள்ளார்.

படையினரின் சடலங்கள் காரைநகரிலேயே தகனம் செய்யப்பட்டமை குறித்து முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

# கிட்டுவைச் சந்திக்க பிரட்மன் செல்லவில்லை!

விடுதலைப் புலிகள் பிரமுகர் கிட்டுவை லண்டன் சென்றுள்ள ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சந்திக்கலாம் என வெளியான செய்தியை ஸ்ரீலங்கா அரசு மறுத்துள்ளது

இந்துப்பத்திரிகையை ஆதாரம் காட்டி ஐலண்ட் பத்திரிகை நேற்று இச் செய்தியை வெளியிட்டிருந்தது.

இது விஷமத்தனமான செய்தி எனவும் பிரட்மன் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே பிரிட்டன் சென்றார் எனவும் ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

பிரட்மன் வீரக்கோன் கிட்டுவைச் சந்திக்கவோ அல்லது பாரிசில் திலகரைச் சந்திக்கவோ அதிகாரம் வழங்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# இரு வருடங்களாக ராணுவம் சவாலை எதிர்நோக்குகிறது

1989 முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். இதுவரை 1500க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகளும் படையினரும் பலியாகியுள்ளனர். இவ்வாறு இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மண்டபத்தில் படையினருக்கான செயற்கைக்கால் பொருத்துவதற்கான நிதி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒலிபரப்புக்கூட்டுத் தாபனப் பணிப்பாளர் ஹட்சன் சமரசிங்க '' ஹமில்டனும், கொப்பேகடுவவுமே நாட்டைக்காப்பதாகவும் தெரிவித்தார். ''

# காசுக்கட்டளை மூலம் 5000ரூபாவரை அனுப்பலாம்

உள்ளூரினுள் காசுக்கட்டளைகள் மூலம் இனி ஐயாயிரம் ரூபா வரை அனுப்பலாம் எனத் தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இதுவரை உள்ளூர் காசுக்கட்டளை மூலம் ஆயிரம் ரூபா வரையிலேயே அனுப்ப முடிந்தது. இப்புதிய பணிப்புரை சகல தபால்களுக்கும் தபால் மா அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இடம்...

ராதபுர அரச அதிபரும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் எனவும் புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. 02

## அத்தியாவசியப்...

களுள் மண்ணெண்ணெய்யும் வந்தது. இதனால் மண்ணெண்ணெய் உட்பட பொருள்களின் விலையில் வீழ்ச்சியேற்படலாம். 31


காலமானார்

வைத்திய கலாநிதி ஏகாம்பரநாதன்

நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலைத் தாபகர் மயில்வாகனப் பண்டிதரின் பீட்டனும், சதாசிவம்பிள்ளை வாலாம்பிகை தம்பதியரின் ஏக புத்திரனுமான வைத்திய கலாநிதி ஏகாம்பரநாதன் காலமானார், அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-08-91 வெள்ளிக்கிழமை காலை 10-00மணிக்கு அன்னாரின்வைத்தியசாலை இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்திற்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வைத்திய கலாநிதி ஏ. உமாகாந்தன்
(நா. ஆ. வைத்தியசாலைத் தருமகர்த்தாவும், உரிமையாளரும்)
நாயன்மார்கட்டு, 08095


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 16.08.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.